[1981 ஏப்ரல் 20

அரசு ஊழியர்களுக்கு ஸ்கூட்டர் வாங்கக் கடன்.

*வினா எண் 794—திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசாங்க ஊழியர்களுக்கு ஸ்கூட்டர் வாங்குவதற்கு கடனாக தரப்படும் தொகையினை ஸ்கூட்டர் விலைக்கேற்றபடி உயர்த்தித் தரும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. கா. கோபாலகிருஷ்ணன்: தலைவரவர்களே, அரசுப் பணியாளர்களுக்கு ஸ்கூட்டர் விலையில் பாதித் தொகைதான் கடனாகத் தரப்படுகிறது. மீதித் தொகைக்கு அவர்கள் தனியாரிடம் அதிக வட்டிக்குக் கடன் வாங்கித்தான் ஸ்கூட்டர் வாங்க வேண்டிய நிலைமை இருக்கின்றது. அந்தத் தொகையைக் கொண்டு அந்த ஸ்கூட்டர் வாங்குகின்ற முயற்சியைக் கைவிட்டு விட்டு அதனை வேறு காரியங்களுக்குப் பயன்படுத்துகிறார்கள். ஆகவே ஸ்கூட்டர் விலைக்கு ஏற்றபடி கடனை உயர்த்தித் தருவதற்கு முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அரசுப் பணியாளர்களுக்கு மிதி வண்டி, ஸ்கூட்டர், போன்றவைகளை வாங்குவதற்கு அவர்களுக்குக் கடன் உதவி செய்யப்பட்டு வருகின்றது. அரசு ஊழியர்களுக்கு அவர்கள் பணியாற்றுகின்ற தன்மையைப் பொறுத்து அவர்களின் திருப்பிச் செலுத்துகின்ற தன்மையைப் பொறுத்தும்தான் கடன் வழங்க வேண்டும். ஆகவே ஸ்கூட்டர் விலை முழுவதையுமே அரசு கடனாக வழங்க வேண்டும் என்பது இயலாது. இதற்கு முன்பு புதிய ஸ்கூட்டர் வாங்குவதாக இருந்தால் 4,500 ரூபாயும், பழைய ஸ்கூட்டர் வாங்குவதாக இருந்தால் 4,000 ரூபாயும் தான் அரசால் கடன் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் 19—12—1979 முதல் புதிய ஸ்கூட்டர் வாங்குவதற்கு 5,000 ரூபாயும், பழைய ஸ்கூட்டர் வாங்குவதற்கு 4,500 ரூபாயும் வழங்குவது என்ற முறை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அதற்கு மேற்கொண்டு அவர்கள் தங்கள் கையிலே இருந்து அல்லது வேறு வகையிலே தான் அதனை வாங்குவதற்குரிய முயற்சியினை எடுத்துக்கொள்ள வேண்டும். அந்த ஸ்கூட்டரின் விலை முழுவதையுமே அரசே ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால் எந்தப் பொருளுக்கு என்று கடன் வழங்கப்படுகின்றதோ அது அந்த அந்த பொருட்களைவாங்குவதற்கான காரியங்களுக்குத்தான் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் அதை வேறு வகையிலே பயன்படுத்துகின்ற சூழ்நிலைகள் இருக்கக்கூடாது என்றும் தான் மத்திய அரசின் நிதிக்குழுவும், மற்றும் ஆடிட்டர் ஜெனரல் அவர்களும் எடுத்துச் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். அரசாங்கம் இந்த மாதிரிக் கடன்களைப் பொறுத்த வரையில் ஓரளவுதான் உதவி செய்ய முடியும். மற்ற

வற்றை அவரவர்கள்தான் பார்த்துக் கொள்ள வேண்டும். மேலும் ஸ்கூட்டர்களின் விலையைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு ஸ்கூட்டரும் ஒவ்வொரு விலைக்கு விற்கின்றது. அது மட்டுமல்லாமல் ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு விதமான விலைகள் இருக்கின்றன. இந்த விலைகளை எல்லாம் அனுசரித்து அதற்கேற்றவாறு கடன் வழங்குவது என்பது இயலாது. அதற்கான பணத்தைக் கடனாகக் கொடுப்பது என்பது சிரமமான காரியம். ஆகவேதான் ஒரு குறிப்பிட்ட தொகையினைக் கடனாக வழங்குகிற முயற்சியை அரசு மேற்கொண்டு வருகின்றது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு ஸ்கூட்டர் வாங்குவதைப் பொறுத்த வரையில் ஒரு கோட்டா முறையில் கொடுத்துக் கொண்டுவந்தார்கள். இப்போது அந்த முறை நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. அந்த முறையை மீண்டும் கொண்டு வருவார்களா? அதுமட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினர்கள் பொறுப் பேற்றவுடன் அவர்கள் தொகுதி வேலையை நல்ல முறையில் கவனிக்க வேண்டி இருப்பதால் அவர்களுக்கு இனாமாக ஸ்கூட்டர் கொடுக்கப்படுமா? அப்படிக் கொடுக்க முடியவில்லை என்றால் குறைந்த விலையிலாவது கொடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தற்போது விபத்துக்கள் அதிகமாகி வருவதாக நமக்குச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் தேர்ந்த சிந்தனையாளர்களாக இருப்பதால் அவர்கள் சிந்தித்துக் கொண்டே செல்வதால் விபத்து ஏற்படும் என்ற காரணத்தால்தான் அவர்களுக்கு இனாமாக ஸ்கூட்டர் வழங்குவது பொருத்தமாக இருக்காது என்று கருதி ஸ்கூட்டர் வழங்கப்படாமல் இருக்கின்றது.

மற்ற விவரங்களைப் பொறுத்த வரையில் அதற்குரிய அமைச்சரவர்களிடம் தனிக் கேள்வியாகப் போட்டால் அவர்கள் அதற்கான விடையினைத் தருவார்கள்.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவரவர்களே, அரசுப் பணிகளில் எவ்வளவு சம்பளம் வாங்குகின்றவர்களுக்கு ஸ்கூட்டர் வாங்கக் கடன் கொடுக்கப்படும்? அது பற்றிய வரைமுறை என்ன? அதை எத்தனைத் தவணைகளில் திருப்பிச் செலுத்த வேண்டும்? இந்த விவரங்களை எல்லாம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பொதுவாக அரசுப் பணிகளில் நான்-கெஸட்டட் ரேங்கில் உள்ளவர்களுக்குத்தான் நாம் கடன் உதவி செய்து வருகிறோம்.

ஆனால் அதற்கான நிபந்தனைகள் பற்றி தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : தலைவரவர்களே, ஸ்கூட்டர்களைப் பொறுத்த வரையில், செட்டாக், லேம்ப்ரட்டா, ஸ்வேகா போன்றவை ரூ 10,000, 8,000, 5,000 என்ற விலைகளில் விற்கின்றன. ஆகவே இவற்றை வாங்குவதற்கு அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுவது போன்று நகராட்சி ஊழியர்களுக்கும் ஸ்கூட்டர் வாங்க முழுத் தொகையையும் கடனாகத் தருவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது பற்றிய விளக்கங்கள் இப்போது இல்லை. எனவே, தனிக் கேள்வி போட்டால் அவர்களைப் பொறுத்த வரையில் இந்த விஷயத்தில் என்ன முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரத்தை அறிவிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. ப. முனுசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் சிந்தனையாளர்களாக இருப்பதனால், விபத்து ஏற்படக்கூடும் என்று அமைச்சர் சொன்னார் மாண்புமிகு அமைச்சர்களுக்கும் அந்த மாதிரி ஸ்கூட்டர், கார் போன்றவை அளிக்கப்பட்டிருக்கின்றனவே, அவர்களுக்கு இந்த மாதிரி ஆபத்துஏற்பட்டால் என்ன செய்வது? (பதில் இல்லை)

(முற்பகல் 9·10)

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்து நெருக்கடி அதிகமாக உள்ள மாநகராட்சி நகராட்சி போன்ற பகுதிகளில் இருக்கும் அரசு ஊழியர்களுக்காவது, அங்கே இருக்கும் போக்குவரத்து நெருக்கடியை உத்தேசித்து, அவர்கள் குறித்த காலத்தில் அலுவலகங்களுக்கு வர வேண்டும் என்பதைக் கணக்கிலெடுத்து, ஸ்கூட்டர் வாங்குவதற்கான அந்த லோன் பணத்தை அவர்களுக்கு உயர்த்திக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அரிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலேயே எடுத்துச் சொன்னேன், முன்பு 4,500 ரூபாய் கொடுத்து வந்ததை இப்போது உயர்த்தி 5,000 ஆக ஆக்கியிருக்கிறோம். பழைய ஸ்கூட்டர்கள் வாங்குவதற்கென்று 4,000 ரூபாய் கொடுத்து வந்தோம், அதை இப்போது 4,500 ஆக உயர்த்தியிருக்கிறோம் என்று, அது எல்லா அரசு ஊழியர்களுக்கும் பொருந்தக்கூடியஅளவில்தான்அமைக்கப்பட்டிருக்கிறது.

1981 எப்ரல் 20]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத்துறையிலே பணியாற்றக்கூடிய ஊழியர்களுக்கு ஸ்கூட்டரில் போக முடியாதவர்களுக்கு ஆயிரம் ரூபாய்க்கு குறைவில்லாமல் சம்பளம் வாங்குபவர்களுக்கு, கார் லோன் கேட்டால், அதை அரசு பரிசீலனை செய்யுமா? வழங்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் அதனுடைய முழு விவரமும் சேகரித்து தரப்படும்.

பையூர் ஏரியில் உயர் ரக மீன்கள் வளர்க்கும் திட்டம்.

*வினா எண் 795—திரு பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு நிதிஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) வடஆற்காடு மாவட்டம் ஆரணி அருகில் பையூர் ஏரியில் உயர் ரக மீன்களை வளர்க்க தமிழ்நாடு அரசு மீன்துறை நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) ஆண்டுக்கு என்ன வருவாய் வரும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(ஆ) ஆரணி நகருக்குக் கிழக்கே உள்ள பையூர் ஏரி என்னும் பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான ஏரியை மீன் துறை எடுத்துக்கொண்டு அதில் விரைவாக வளரும் மீன் குஞ்சுகளை இருப்பு செய்யும் பணி மேற்கொண்டுள்ளது. ஓராண்டிற்குப் பின் கிடைக்கும் வளர்ந்த மீன்களை நகர மக்களுக்குக் குறைந்த விலையில் கிடைக்கச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கம்.

(இ) பருவ மழை தவறாது பெய்து, ஏரியில் நீர்மட்டம் குறையாமலிருந்தால் அதிக அளவு மீன் குஞ்சுகளை இருப்பு செய்து, ஆண்டொன்றிற்கு 30 டன்கள் மீன்வரை மீன் உற்பத்தி செய்ய வாய்ப்பு உள்ளது. இதனை விற்பதால் ரூ. 60,000 வரை வருவாய் கிடைக்கும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மீன் வளர்ப்புத் திட்டத்திற்காக செலவழிக்கப்படுகின்ற தொகை எவ்வளவு? பருவ மழை இருந்